வகுப்பு : 4

பாடம்-1

ஞாயிறு பள்ளி மத்திய நிறுவனம், கடலூர்.

சீனாய் மலையில் மோசே

(யாத். 19 ; 20 : 2 , 18 - 26 ; 24 ; 25 : 1 - 9 ; 31 : 18)

I <u>மனப்பாட வசனம் :</u> (2 Marks)

<u>பத்து கற்பனைகள் :</u>

1. *என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம். (யாத் 20 : 3)*
2. *யாதொரு சொருபத்தையாகிலும், விக்கிரகத்தையாகிலும் நீ உண்டாக்கவோ, நமஸ்கரிக்கவோ சேவிக்கவோ வேண்டாம். (யாத். 20 : 4, 5)*
3. *உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக. (யாத். 20 : 7)*
4. *ஓய்வு நாளைப் பரிசுத்தமாக ஆசரிக்க நினைப்பாயாக. (யாத். 20 : 8)*
5. *உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக. (யாத். 20 : 12)*
6. *கொலை செய்யாதிருப்பாயாக. (யாத். 20 : 13)*
7. *விபசாரம் செய்யாதிருப்பாயாக. (யாத். 20 : 14)*
8. *களவு செய்யாதிருப்பாயாக. (யாத். 20 : 15)*
9. *பிறனுக்கு விரோதமாகப் பொய்ச் சாட்சி சொல்லாதிருப்பாயாக. (யாத். 20 : 16)*
10. *பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக. (யாத். 20 : 17)*

II <u>பொருத்துக :</u> (1 Mark)

1. *கர்த்தருடைய மகிமை*	-	*மேகம் (யாத் 24 : 16)*
2. *கர்த்தருடைய மகிமையின் காட்சி*	-	*பட்சிக்கிற அக்கினி (யாத். 24 : 17)*
3. *தேவனுடைய விரல்*	-	*கற்பலகைகள் (யாத். 31 : 18)*
4. *தேவனுடைய விரல்*	-	*சாட்சியின் பலகைகள் (யாத். 31 : 18)*
5. *சீனாய் மலை*	-	*ஆசிப்புக்கூடாரத்தின் மாதிரி (யாத். 25 : 9)*
6. *சீனாய் மலை*	-	*நியமங்கள், நியாயங்கள் (யாத்.24 : 12)*
7. *சீனாய் மலை*	-	*தேவ பர்வதம் (யாத் 24 : 12)*
8. *சீனாய் மலையின் மேல்*	-	*கர்த்தருடைய மகிமை (யாத் 24 : 16)*
9. *சீனாய் மலையடிவாரம்*	-	*பரிசுத்தமாகுதல் (யாத். 19 : 13, 14)*
10. *இஸ்ரவேலர்*	-	*சொந்த சம்பத்து (யாத். 19 : 5)*
11. *இஸ்ரவேலர்*	-	*ஆசாரிய ராஜ்யம் (யாத். 19 : 6)*
12. *இஸ்ரவேலர்*	-	*பரிசுத்த ஜாதி (யாத். 19 : 6)*
13. *ஆசரிப்பு கூடாரம்*	-	*மலையில்காண்பிக்கப்பட்ட மாதிரி (யாத் 25 : 9)*
14. *மோசேயின் ஊழியக்காரன்*	-	*யோசுவா (யாத் 24 : 13)*
15. *இஸ்ரவேலின் மூப்பர்*	-	*எழுபது பேர் (யாத். 24 : 1)*

III <u>கோடிட்ட இடங்களை நிரப்புக :</u> (1 Mark)

1. _____*மலையடிவாரத்தில் ஜனங்கள் பரிசுத்தமாக்கப்பட்டார்கள்.*
2. _____*மலையிலிருந்து இறங்கி ஜனங்களிடத்தில் வந்து அவர்களைப் பரிசுத்தப்படுத்தினான்.*
3. *கர்த்தர் மோசேயிடம்*_____*உட்பட ஜனங்கள் ஒருவரும* _____*தொடக்கூடாதென்று எச்சரிக்கும்படி சொன்னார்*
4. *மலையைத் தொடுகிறவன் எவனும் நிச்சயமாகவே,* _____.

5. அவர்கள் நடுவிலே நான் வாசம் பண்ண எனக்கு ஒரு _____உண்டாக்குவார்களாக.

6. இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட _____ மாதம் _____நாளில் சீனாய் வனாந்தரத்தில் சேர்ந்தார்கள்.

7. _____எழுதப்பட்ட கற்பலகைகளாகிய சாட்சியின் இரண்டு பலகைகளை கர்த்தர் மோசேயிடத்தில் கொடுத்தார்..

8. _____ _____ கொடுப்பவன் எவனோ அவனிடத்தில் எனக்குக் காணிக்கையை வாங்குவீர்களாக.

9. நீங்கள் எனக்கு _____ இராஜ்யமும் _____ ஜாதியுமாய் இருப்பீர்கள்.

10. இஸ்ரவேலர் _____ இருந்து புறப்பட்டு சீனாய் வனாந்தரத்தில் சேர்ந்தார்கள்.

விடைகள்

1. சீனாய் (யாத். 19 : 13, 14)
2. மோசே (யாத். 19 : 14)
3. ஆசாரியர், மலை (யாத். 19 : 12,24)
4. கொல்லப்படுவான் (யாத். 19 : 12)
5. பரிசுத்த ஸ்தலத்தை (யாத். 25 : 8)
6. மூன்றாம், முதலாம் நாள் (யாத். 19 : 1)
7. தேவனுடைய விரலினால் (யாத். 31 : 18)
8. மனப்பூர்வமாய் உற்சாகத்துடன் (யாத். 25 : 2)
9. ஆசாரிய, பரிசுத்த (யாத். 19 : 6)
10. ரெவிதீமில் (யாத். 19 : 2)

IV <u>சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுது:</u> (1 Mark)

1. எந்த மலையடிவாரத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் பரிசுத்தமாக்கப்பட்டனர்?
   a) ஏர்மோன் b) ஓரேப் c) சீனாய் d) மோரியா

2. மோசே எத்தனை நாட்கள் சீனாய் மலையின் மேல் இரவு பகலாய் கர்த்தரோடே கூட இருந்தான்?
   a) 40 b) 50 c) 30 d) 10

3. சீனாய் மலையில் யார் மாத்திரம் கர்த்தரிடத்தில் சமீபித்து வரலாம்?
   a) ஆரோன் b) மோசே c) யோசுவா d) ஊர்

4. இஸ்ரவேல் புத்திரர் எந்த தேசத்திலிருந்து கானானை நோக்கி புறப்பட்டார்கள்?
   a) கானான் b) எகிப்து c) சீரியா d) மோவாப்

5. மோசே சீனாய் மலையடிவாரத்தில் எந்த புஸ்தகத்தை எடுத்து ஜனங்களுக்கு வாசித்தான்?
   a) ஜீவ புஸ்தகம் b) ஆட்டுக்குட்டியானவரின் புஸ்தகம் c) ஞாபக புஸ்தகம்
   d) உடன்படிக்கையின் புஸ்தகம்

6. கர்த்தர் ஆசீர்வதித்து பரிசுத்தமாக்கின நாள் எது?
   a) ஓய்வுநாள் b) ஆறாம் நாள் c) பெந்தெகோஸ்தே நாள் d) மூன்றாம் நாள்

விடைகள்

1.	*c (யாத். 19 : 13,14)*	*4.*	*b. (யாத். 12 : 51)*
2.	*a. (யாத். 24 : 18)*	*5.*	*d. (யாத். 24 : 7)*
3.	*b. (யாத். 24 : 2)*	*6.*	*a. (யாத். 20 : 11)*

V *யார் யாரிடம் கூறியது* : (2Marks)

1. "கர்த்தர் அருளின எல்லா வார்த்தைகளின்படி செய்வோம்". (யாத் 24 : 3)
யார் : ஜனங்கள்
யாரிடம் : மோசேயிடம்

2. "நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் , பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள்" (யாத் 19 : 6)
யார் : கர்த்தர்
யாரிடம் : மோசேயிடம்

3. "நீ இறங்கிப் போ, பின்பு நீயும் ஆரோனும் கூடி ஏறிவாருங்கள்". (யாத் 19 : 24)
யார் : கர்த்தர்
யாரிடம் : மோசேயிடம்

4. "நாங்கள் உங்களிடத்தில் திரும்பி வருமட்டும் நீங்கள் இங்கே எங்களுக்காகக் காத்திருங்கள்". (யாத் 24 : 14)
யார் : மோசே
யாரிடம் : மூப்பரிடம்

5. "மூன்றாம் நாளைக்கு ஆயத்தப்பட்டிருக்கக் கடவர்கள்". (யாத் 19 : 11)
யார் : கர்த்தர்
யாரிடம் : மோசேயிடம்

6. "கர்த்தர் உங்களோடே பண்ணின உடன்படிக்கையின் இரத்தம் இதுவே". (யாத் 24 : 8)
யார் : மோசே
யாரிடம் : ஜனங்களிடம்

VI *ஒரிரு வாக்கியங்களில் விடையளி :* (2 Marks)

1. ஆசரிப்புக் கூடாரம் உண்டாக்க வேண்டிய விதம் யாருக்கு எங்கே வெளிப்படுத்தப்பட்டது?
மோசேக்கு சீனாய் மலையில் வெளிப்படுத்தப்பட்டது (யாத். 24 : 18 , 25 : 1, 9)

2. மோசே சீனாய் மலையில் எத்தனை நாட்கள் கர்த்தரோடே இருந்தான்?
இரவும் பகலும் 40 நாட்கள் கர்த்தரோடே இருந்தான். (யாத் 24 : 18)

3. சீனாய் மலையின் கொடுமுடியில் இறங்கியது யார்? சீனாய் மலையின் கொடுமுடியில் ஏறிப்போனது யார்?
சீனாய் மலையின் கொடுமுடியில் இறங்கியது கர்த்தர். சீனாய் மலையின் கொடுமுடியில் ஏறியது மோசே. (யாத் 19 : 20)

4. கர்த்தர் யாரிடத்தில் காணிக்கையை வாங்கும்படி கூறினார்?
மனப்பூர்வமாய் உற்சாகத்துடன் கொடுப்பவர்களிடத்தில். (யாத் 25 : 2)

5. ஆசாரியர்களில் யார் தங்களைப் பரிசுத்தப்படுத்திக் கொள்ள ஜாக்கிரரையாய் இருக்க வேண்டும்? ஏன்?

கர்த்தருடைய சமூகத்தில் வருகிற ஆசாரியர்கள் கர்த்தர் தங்களுக்குள்ளே சங்காரம் பண்ணாதபடிக்கு தங்களைப் பரிசுத்தப்படுத்திக் கொள்ள ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும்.

6. கர்த்தர் சீனாய் மலையில் இறங்கிய போது மலை எவ்வாறு காட்சியளித்தது?

1.மலை முழுவதும் புகைக்கடாய் இருந்தது.
2.மலை மிகவும் அதிர்ந்தது. (யாத். 19 : 18)

7. இஸ்ரவேலர் கர்த்தருடைய சொந்த சம்பத்தாயிருக்கும்படி அவர்கள் செய்ய வேண்டியது என்ன?

1. கர்த்தருடைய வாக்கை உள்ளபடி கேட்க வேண்டும்.
2. அவருடைய உடன்படிக்கையை கைக்கொள்ள வேண்டும். (யாத் 19 : 5)

8. உடன்படிக்கையைக் கைக்கொள்ளுகிற இஸ்ரவேல் ஜனங்கள் தனக்கு எப்படிப்பட்ட ராஜ்யமும், ஜாதியுமாய் இருப்பார்கள் என்று கர்த்தர் கூறினார்?

உடன்படிக்கையைக் கைக்கொள்ளுகிற இஸ்ரவேல் ஜனங்கள் தனக்கு ஆசாரிய ராஜ்யமும், பரிசுத்த ஜாதியுமாய் இருப்பார்கள் என்று கர்த்தர் கூறினார்.(யாத். 19 : 6)

9. மோசே சீனாய் மலையடிவாரத்தில் எதை கட்டினான்? எதை நிறுத்தினான்?

1. பலிபீடத்தைக் கட்டினான்.
2. பன்னிரெண்டு தூண்களை நிறுத்தினான். (யாத்.24 : 4)

10. ஜனங்கள் மோசேயை என்றைக்கும் விசுவாசிக்கும்படியாக தான் என்ன செய்யப் போவதாக கர்த்தர் மோசேயிடம் கூறினார்?

கர்த்தர் மோசேயை நோக்கி, ''நான் உன்னோடே பேசும்போது, ஜனங்கள் கேட்டு, உன்னை என்றைக்கும் விசுவாசிக்கும்படி நான் கார்மேகத்தில் உன்னிடத்திற்கு வருவேன்'' என்று கூறினார். (யாத் 19 : 9)

11. கர்த்தர் சீனாய் மலையின் மேல் எதற்காக எழுந்தருளினார் என்று மோசே ஜனங்களிடம் கூறினான்?

1. உங்களைச் சோதிப்பதற்காகவும்
2. நீங்கள் பாவஞ் செய்யாதபடிக்கு தம்மைப்பற்றும் பயம் உங்கள் முகத்திற்கு முன்பாக இருப்பதற்காகவும் எழுந்தருளினார் என்று மோசே கூறினான். (யாத். 20 : 20)

12. மோசே சீனாய் மலையின் மேல் ஏறிப்போகும்போது ஜனங்களுக்கு யாதோரு காரியம் உண்டானால் அவர்களை யாரிடத்தில் போகும்படி கூறினான்?

ஆரோனிடத்திலும் ஊரினிடத்திலும் போகும்படி மோசே கூறினான். (யாத். 24 : 14)

13. சீனாய் மலையின் அடிவாரத்திற்கு ஜனங்கள் எப்போது வரும்படி கர்த்தர் கூறினார்?

எக்காளம் நெடுந்தொனியாய் தொனிக்கும் போது. (யாத் 19 : 13)

14. கர்த்தருடைய சத்தத்தை கேட்க வேண்டுமானால், நாம் என்ன செய்ய வேண்டும்?

நாம் நம்மைச் சுத்திகரித்துக் கொள்ள வேண்டும். (போதனை)

15. நம்முடைய வாழ் நாட்கள் நீடித்திருப்பதற்கு நாம் யாரை கனம் பண்ண வேண்டும்?

நம்முடைய தகப்பனையும், தாயையும் கனம் பண்ண வேண்டும். (யாத். 20 : 12)

VII <u>கருக்கமான விடையளி</u> : (4 Marks)

1. கர்த்தர் மூன்றாம் நாள் விடியற்காலத்தில் சீனாய் மலையின் மேல் இறங்கின போது பாளயத்திலிருக்கிற ஜனங்கள் ஏன் நடுங்கினார்கள்?

மூன்றாம் நாள் விடியற்காலையில் இடிமுழக்கங்களும் மின்னல்களும் மலையின் மேல் கார்மேகமும் மகா பலத்த எக்காள சத்தமும் உண்டாயிற்று. ஆகையினால் பாளயத்திலிருந்த ஜனங்கள் நடுங்கினார்கள். (யாத். 19 : 16)

2. மோசேயை தவிர சீனாய் மலையில் காத்தரிடத்தில் ஏறி வந்து தூரத்திலிருந்து பணிந்து கொண்டவர்கள் யார்? யார்?

1. ஆரோன்
2. நாதாப்
3. அபியூ
4. இஸ்ரவேலின் மூப்பரில் எழுபது போர். (யாத். 24 : 1)

3. கர்த்தர் ஆசரிப்புக் கூடாரத்தை எப்படி எதற்காக உண்டாக்கச் சொன்னார்?

மோசேக்கு மலையில் காண்பிக்கப்பட்ட மாதிரியின்படியும், அதின் எல்லா தட்டுமுட்டுகளின் மாதிரியின்படியும், தான் அவர்கள் நடுவில் வாசம் பண்ணும்படியாக, பரிசுத்த ஸ்தலமாகிய ஒரு ஆசரிப்புக் கூடாரத்தை உண்டாக்கும்படி கர்த்தர் மோசேயிடம் சொன்னார். (யாத். 25 : 8, 9)

4. பலிபீடத்தை எதைக் கொண்டு உண்டாக்க வேண்டுமென்று கர்த்தர் மோசேயிடம் கூறினார்?

1. மண்ணினால் உண்டாக்க வேண்டும் (யாத். 20 : 24)
2. கல்லினால் உண்டாக்க வேண்டுமாகில் அதை வெட்டின கல்லுகளால் கட்ட கூடாது. ஏனெனில் அதின்மேல் உளியிட்டவுடனே அது அசுசிப்படும். (யாத். 20 : 25)

5. ஆசரிப்புக் கூடாரத்தின் வேலைக்காக காணிக்கையாக வாங்க வேண்டிய பொருள்கள் யாவை?

1) பொன்
2) வெள்ளி
3) வெண்கலம்
4) இளநீல நூல்
5) இரத்தாம்பர நூல்
6) சிவப்பு நூல்
7) மெல்லிய பஞ்சு நூல்
8) வெள்ளாட்டு மயிர்
9) சிவப்புத்தீர்த்த ஆட்டுக்கடாத்தோல்
10) தகசுத் தோல்
11) சீத்திம் மரம்
12) விளக்கெண்ணெய்
13) பரிமளவர்க்கங்கள்
14) சுகந்த வர்க்கங்கள்
15) கோமேதகக் கற்கள்
16) இரத்தினங்கள்
17) ஆட்டுக்கடாத்தோல் (யாத். 25 : 1-9)

6. வாக்குத்தத்தமுள்ள முதலாம் கற்பனை எது?

உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும் , உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாம் கற்பனையாயிருக்கிறது.(எபேசியர். 6 : 2, 3)

7. பத்து கற்பனைகளில் முதல் 4 கற்பனைகளை எழுது,(அல்லது)
பத்து கற்பனைகளில் கடைசி 4 கற்பனைகளை எழுது (அல்லது)
பத்து கற்பனைகளில் வரிசை கிரமமாக எழுது.

<u>பத்து கற்பனைகள் :</u>

1. என்னையன்றி உனக்கு வேறே தேரவர்கள் உண்டாயிருக்க வேண்டாம். (யாத் 20 : 3)
2. யாதொரு சொருபத்தையாகிலும் , விக்கிரகத்தையாகிலும் நீ உண்டாக்கவோ, நமஸ்கரிக்கவோ சேவிக்கவோ வேண்டாம்.(யாத். 20 : 4, 5)
3. உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக. (யாத். 20 : 7)
4. ஓய்வு நாளைப் பரிசுத்தமாக ஆசரிக்க நினைப்பாயாக (யாத். 20 : 8)
5. உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக. (யாத். 20 : 12)
6. கொலை செய்யாதிருப்பாயாக (யாத். 20 : 13)
7. விபசாரம் செய்யாதிருப்பாயாக (யாத். 20 : 14)
8. களவு செய்யாதிருப்பாயாக (யாத். 20 : 15)
9. பிறனுக்கு விரோதமாகப் பொய்ச் சாட்சி சொல்லாதிருப்பாயாக (யாத். 20 : 16)
10. பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக. (யாத். 20 : 17)

VIII*<u>போதனை</u>* : (2 Marks)

நம்முடைய தேவன் பரிசுத்தத்தில் மகத்துவமுள்ளவராய் இருக்கிறார். அவர் சத்தத்தைக்கேட்க வேண்டுமானால் நாம் நம்மைச் சுத்திகரித்துக் கொள்ள வேண்டும்.

****

வகுப்பு : 4

பாடம்-2

ஞாயிறு பள்ளி மத்திய நிறுவனம், கடலூர்.

இஸ்ரவேலரும் பொன் கன்றுக் குட்டியும்

(யாத். அதி. 32)

I <u>மனப்பாட வசனம் :</u> (2 Marks)

<u>மத்தேயு 22 : 37</u>

இயேசு அவனை நோக்கி, உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்பு கூறுவாயாக.

II <u>பொருத்துக :</u> (1 Mark)

1.	கன்றுக்குட்டி	-	பொன்காதணிகள்	(யாத். 32 : 2,3)
2.	ஆரோன்	-	பொன் கன்றுக் குட்டி	(யாத். 32 : 24)
3.	சிற்பக் கருவி	-	பொன் காதணிகள்	(யாத். 32 : 4)
4.	இஸ்ரவேலர்	-	வணங்காக் கழுத்துள்ள ஜனம்	(யாத். 32 : 9)
5.	சாட்சி பலகைகள்	-	இரண்டு	(யாத். 32 : 15)
6.	பொன்கன்றுக் குட்டி	-	நடனம்	(யாத். 32 : 19)
7.	கர்த்தருடைய பட்சம்	-	லேவியர்	(யாத். 32 : 26)
8.	லேவியர்	-	பிரதிஷ்டை	(யாத். 32 : 29)

III <u>கோடிட்ட இடங்களை நிரப்புக :</u> (1 Mark)

1. ஆரோன் பொன் கன்றுக் குட்டியை பார்த்து, அதற்கு முன்பாக ஒரு பலிபீடத்தைக் கட்டி நாளைக்கு _____ என்று கூறினான்.

2. மோசே பாளயத்துக்கு சமீபித்து அந்த கன்றுக்குட்டியையும், _____ கண்டான்.

3. பாளயத்தின் வாசலில் நின்று கர்த்தருடைய பட்சத்தில் இருக்கிறவர்கள் யார் என்று மோசே கேட்ட போது , _____ எல்லாரும் அவனித்தில் கூடிவந்தார்கள்.

4. லேவியின் புத்திரர் மோசே சொன்னபடியே ஜனங்களில் _____ கொன்று போட்டார்கள்.

5. ஜனங்கள் பொன்னினால் தங்களுக்குத் தெய்வங்களை உண்டாக்கி _____ செய்தார்கள்.

6. கர்த்தர் மோசேயை நோக்கி, ''நான் உனக்குச் சொன்ன இடத்துக்கு ஜனங்களை அழைத்துக் கொண்டு போ, என் _____ உனக்கு முன்பாக செல்லுவார்'' என்றார்.

7. இஸ்ரவேல் ஜனங்கள் பொன் கன்றுக் குட்டியைச் செய்வித்ததின் நிமித்தம் கர்த்தர் ஜனங்களை _____

விடைகள்

1. கர்த்தருக்கு பண்டிகை (யாத். 32 : 5)
2. நடனத்தையும் (யாத். 32 : 19)
3. லேவியின் புத்திரர் (யாத். 32 : 26)
4. மூவாயிரம் பேரைக் (யாத். 32 : 28)
5. மகா பெரிய பாவம் (யாத்32 : 31)
6. தூதனானவர் (யாத். 32 : 34)
7. உபாதித்தார் (யாத். 32 : 35)

IV <u>சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுது :</u> (1 Mark)

1. பாளயத்தில் யுத்தத்தின் இரைச்சல் உண்டாயிருக்கிறது என்று கூறியது யார்?
   a) கர்த்தர் *b) யோசுவா* *c) ஆரோன்* *d) மோசே*

2. பொன் கன்றுக் குட்டியினிமித்தம் ஜனங்கள் மேல் பெரும் பாதகத்தை சுமத்துவதற்கு காரணமாயிருந்தது யார்?
   a) ஆரோன் *b) ஆகான்* *c) மிரியாம்* *d) பிலேயாம்.*

3. கர்த்தருடைய பட்சத்தில் இருக்கிறவர்கள் யார் என்று மோசே கேட்ட போது அவனிடத்தில் கூடி வந்தவர்கள் யார்?
   a) ரூபன் புத்திரர் *b) யூதா புத்திரர்* *c) யோசேப்பின் புத்திரர்* *d) லேவியின் புத்திரர்*

4. பொன் கன்றுக்குட்டியைச் செய்ததால், கர்த்தருடைய வார்த்தையின்படி லேவியின் புத்திரரால், கொன்று போடப்பட்ட ஜனங்கள் எத்தனை பேர்?
   a) ஐயாயிரம் பேர் *b) இரண்டாயிரம் பேர்* *c) முப்பத்தாறு பேர்* *d) மூவாயிரம் பேர்*

5. இஸ்ரவேல் ஜனங்கள் பொன் கன்றுக் குட்டியை செய்வித்ததின் நிமித்தம் அவர்களை உபாதித்தது யார்?
   a) கர்த்தர் *b) மோசே* *c) யோசுவா* *d) லேவியின் புத்திரர்*

<u>விடைகள்</u>

1.	*b. (யாத். 32 : 17)*	*3.*	*d. (யாத். 32 : 26)*	*5.*	*a. (யாத். 32 : 35)*
2.	*a. (யாத். 32 : 21)*	*4.*	*d. (யாத். 32 : 28)*		

V <u>யார் யாரிடம் கூறியது</u> : (2Marks)

1. "எங்களுக்கு முன் செல்லும் தெய்வங்களை உங்களுக்காக உண்டு பண்ணும் "(யாத்.32:1)
   யார் : இஸ்ரவேல் ஜனங்கள்
   யாரிடம் : ஆரோனிடம்

2. "நாளைக்கு கர்த்தருக்கு பண்டிகை" (யாத். 32 : 5).
   யார் : ஆரோன்
   யாரிடம் : இஸ்ரவேல் ஜனங்களிடம்

3. "இவர்கள் வணங்காக் கழுத்துள்ள ஜனம்".(யாத். 32 : 9)
   யார் : கர்த்தர்
   யாரிடம் : மோசேயிடம்

4. "உன்னை ஒரு பெரிய ஜாதியாக்குவேன்". (யாத். 32 : 10)
   யார் : கர்த்தர்
   யாரிடம் : மோசேயிடம்

5. "பாடலின் சத்தம் எனக்கு கேட்கிறது" (யாத். 32 : 18).
   யார் : மோசே
   யாரிடம் : யோசுவாவிடம்

6. "இது பொல்லாத ஜனம்" (யாத். 32 : 22).
   யார் : ஆரோன்
   யாரிடம் : மோசேயிடம்

7. "அக்கினியிலே போட்டேன் அதிலிருந்து இந்த கன்றுக்குட்டி வந்தது" (யாத். 32 : 24).
   யார் : ஆரோன்
   யாரிடம் : மோசேயிடம்

8. "கர்த்தருடைய பட்சத்தில் இருக்கிறவர்கள் யார்?" (யாத். 32 : 26).
யார் : மோசே
யாரிடம் : ஜனங்களிடம்

9. "மகா பெரிய பாவஞ் செய்தீர்கள்" (யாத். 32 : 30).
யார் : மோசே
யாரிடம் : ஜனங்களிடம்

10. "அவன் பேரை என் புஸ்தகத்திலிருந்து கிறுக்கிப் போடுவேன்" (யாத். 32 : 33).
யார் : கர்த்தா
யாரிடம் : மோசேயிடம்

VI <u>ஒரிரு வாக்கியங்களில் விடையளி :</u> (2-Marks)

1. மோசே மலையிலிருந்து இறங்கி வரத் தாமதித்தப் போது ஜனங்கள் ஆரோனிடம் என்ன கேட்டார்கள்?
தங்களுக்கு முன் செல்லும் தெய்வங்களை தங்களுக்காக உண்டு பண்ணும்படி கேட்டார்கள். (யாத். 32 : 1)

2. பொன் கன்றுக் குட்டியை வார்ப்பித்தது யார்? கர்த்தருடைய பட்சத்தில் நின்றவர்கள் யார்?
i) பொன் கன்றுக்குட்டியை வார்ப்பித்தவன் ஆரோன். (யாத். 32 : 4)
ii) கர்த்தருடைய பட்சத்தில் நின்றவர்கள் லேவியின் புத்திரர். (யாத். 32 : 26)

3. ஜனங்கள் பொன் கன்றுக் குட்டியை செய்வித்ததைக் குறித்து மோசேக்கு அறிவித்தது யார்?
ஜனங்கள் பொன் கன்றுக்கட்டியை செய்வித்ததைக் குறித்து கர்த்தர் மோசேக்கு அறிவித்தார். (யாத் 32 : 8)

4. பொன் கன்றுக் குட்டியினிமித்தம் மோசே யாரை கடிந்து கொண்டான்? கர்த்தர் விதித்த வழியை விட்டு சீக்கிரமாய் விலகினவர்கள் யார்?
1) ஆரோனை கடிந்து கொண்டான் (யாத். 32 : 21)
2) கர்த்தர் விதித்த வழியை விட்டு சீக்கிரமாய் விலகினவர்கள் இஸ்ரவேல் ஜனங்கள். (யாத். 32 : 8)

5. ஜனங்கள் பொன் கன்றுக் குட்டியை செய்ததினிமித்தம் கர்த்தர் கோபங் கொண்டு மோசேயிடம் கூறிய வார்த்தைகள் யாவை?
ஜனங்களை அழித்து விட்டு மோசேயை பெரிய ஜாதியாக்குவேன் என்று கூறினார். (யாத். 32 : 10)

6. ஜனங்கள் பொன் கன்றுக் குட்டியை செய்ததினிமித்தம் கர்த்தர் இஸ்ரவேலருக்கு செய்ய நினைத்திருந்த தீங்கு என்ன?
ஜனங்கள் பொன் கன்றுக் குட்டியை செய்ததினிமித்தம் அவர்களை முற்றிலும் அழித்துப் போடும்படியான தீங்கை அவர்களுக்கு செய்ய கர்த்தர் நினைத்திருந்தார். (யாத். 32 : 10)

7. பொன் கன்றுக் குட்டியை செய்ததினிமித்தம் உண்டான தேவனுடைய கோபம் மாறும்படி மோசே கெஞ்சி பிரார்த்தித்தப் போது கர்த்தர் என்ன செய்தார்?
கர்த்தர் தமது ஜனங்களுக்குச் செய்ய நினைத்த தீங்கைச் செய்யாதபடிக்குப் பரிதாபங் கொண்டார். (யாத் 32 : 14)

8. எந்த நிர்பந்தமான சூழ்நிலையில் பொன் கன்றுக் குட்டியை தான் உண்டாக்கினதாக ஆரோன் மோசேயிடம் கூறினான்?
எங்களுக்கு முன் செல்லும் தெய்வங்களை எங்களுக்கு உண்டு பண்ணும். எகிப்து தேசத்திலிருந்து எங்களை அழைத்துக் கொண்டு வந்த அந்த மோசேக்கு என்ன சம்பவித்ததோ அறியோம் என்று இந்த பொல்லாத ஜனங்கள் தன்னிடம் கூறியதால் தான், பொன் கன்றுக் குட்டியை உண்டாக்கினதாக ஆரோன் மோசேயிடம் கூறினான்.(யாத்32:23)

9. மோசே யாரை கர்த்தருக்கு பிரதிஷ்டை பண்ணும்படி கூறினான் ? ஏன்?

இஸ்ரவேல் ஜனங்கள் பொன் கன்றுக் குட்டியை உண்டாக்கி பாவம் செய்த போது லேவிபுத்திரர் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்படிந்து அவனவன் தன் தன் மகனுக்கும், சகோதரனுக்கும் விரோதமாக இருந்தார்கள். ஆகையால் மோசே அவர்களிடத்தில் கர்த்தரிடத்திலிருந்து ஆசீர்வாதம் பெரும்படியாக நீங்கள் உங்களைக் கர்த்தருக்கென்று பிரதிஷ்டை பண்ணிக் கொள்ளுங்கள் என்று கூறினான். (யாத். 32 : 29)

10. தன்னுடைய பேரை கர்த்தருடைய புஸ்தகத்திலிருந்து கிறுக்கிப் போடும்படி வேண்டிக் கொண்டது யார்? கர்த்தர் யாருடைய பேரைக் கிறுக்கிப் போடுவதாக கூறினார்?

1) *மோசே (யாத். 32 : 32)*
2) *தனக்கு விரோதமாக பாவஞ் செய்தவன் எவனோ அவனுடைய பேரை தன் புஸ்தகத்திலிருந்து கிறுக்கிப் போடுவதாக கர்த்தர் கூறினார். (யாத். 32 : 33)*

11. ஜனங்களுகாக பாவநிவிர்த்தி செய்யக் கூடுமோ என்று கர்த்தரிடம் விசாரிக்க சென்ற மோசேயிடம் கர்த்தர் ஜனங்களை எங்கு அழைத்துக் கொண்டு போகும்படி கூறினார்? அவர்களை வழிநடத்தும் படி யாரை அனுப்புவதாக சொன்னார்?

1) *கர்த்தர் தாம் சொன்ன கானான் தேசத்திற்கு ஜனங்களை அழைத்துக் கொண்டு போகும்படியாக மோசேயிடம் கூறினார்.*
2) *அவர்களை வழிநடத்தும்படி கர்த்தர் தமது தூதனானவரை அவர்களுக்கு முன் செல்லும்படியாக அனுப்புவதாக கூறினார். (யாத். 32 : 34)*

VII <u>*சுருக்கமான விடையளி*</u> : (4-Marks)

1. இஸ்ரவேல் ஜனங்கள் பொன் கன்றுக்குட்டிக்கு முன்பாக பணிந்து பண்டிகை கொண்டாடிய விதத்தை எழுது.

இஸ்ரவேல் ஜனங்கள் அதிகாலையில் எழுந்து பொன் கன்றுக்கட்டிக்கு முன்பாக பணிந்து கொண்டு சர்வாங்க தகன பலிகளையிட்டு, சமாதான பலிகளைச் செலுத்தினார்கள். பின்பு ஜனங்கள் புசிக்கவும், குடிக்கவும் உட்கார்ந்து விளையாட எழுந்தார்கள். இவ்வாறாக பண்டிகை கொண்டாடினார்கள். (யாத். 32 : 6, 8)

2. தன்னை பெரிய ஜாதியாக்குவேன் என்று கூறிய கர்த்தரிடம் இஸ்ரவேல் புத்திரருக்காக மோசே எவ்வாறு கெஞ்சிப் பிராத்தித்தான்?

1) *கர்த்தாவே, தேவரீர் மகா பலத்தினாலும் வல்லமையுள்ள கையினாலும் எகிப்து தேசத்திலிருந்து புறப்படப் பண்ணின உம்முடைய ஜனங்களுக்கு விரோதமாக உம்முடைய கோபம் பற்றி யெரிவதென்ன?*
2) *உம்முடைய கோபத்தின் உக்கிரத்தை விட்டுத் திரும்பி, உமது ஜனங்களுக்கு தீங்கு செய்யதாதபடிக்கு அவர்கள் மேல் பரிதாபங் கொள்ளும்.*
3) *உமது தாசராகிய ஆபிரகாமையும், ஈசாக்கையும், இஸ்ரவேலையும் நினைத்தருளும் என்று மோசே கெஞ்சிப் பிராத்தித்தான்.(யாத். 32 : 11, 13)*

3. சாட்சி பலகைகள் குறிப்பு வரைக.

1) *கர்த்தர் சீனாய் மலையில் மோசேயோடு பேசி முடித்தபின், கற்பலகைகளாகிய இரண்டு சாட்சியின் பலகைகளை அவனிடத்தில் கொடுத்தார்.(யாத். 31 : 18)*
2) *அந்தப் பலகைகள் இருபுறமும் எழுதப்பட்டிருந்தது.*
3) *அவைகள் அந்தப் பக்கத்திலும், இந்தப் பக்கத்திலும் எழுதப்பட்டிருந்தது.*
4) *அந்தப் பலகைகள் தேவனால் செய்யப்பட்டதாயிருந்தது. (யாத். 32 : 15, 16)*
5) *அவைகளிலே பதிந்த எழுத்து தேவனால் எழுப்பட்ட எழுத்துமாயிருந்தது.*

4. பொன் கன்றுக் குட்டியையும், நடனத்தையும், கண்ட போது மோசே என்ன செய்தான்?

மோசே கோபம் மூண்டவனாகி, தன் கையிலே இருந்த சாட்சியின் பலகைகளை மலையின் அடியிலே எறிந்து உடைத்துப் போட்டு, அவர்கள் உண்டு பண்ணின பொன் கன்றுக்குட்டியை எடுத்து, அக்கினியில் சுட்டெரித்து அதைப் பொடியாக அரைத்து, தண்ணீரின் மேல், தூவி அதை இஸ்ரவேல் புத்திரர் குடிக்கும்படி செய்தான். (யாத். 32 : 19, 20)

5. கர்த்தருடைய பட்சத்தில் நிற்கும்படி கூடிவந்த லேவிபுத்திரரிடம் மோசே கூறியது என்ன?

மோசே லேவிபுத்திரரை நோக்கி, ''நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் பட்டயத்தை உங்கள் அரையிலே கட்டிக் கொண்டு, பாளயமெங்கும் உள்ளும் புறம்பும் வாசலுக்கு வாசல் போய், ஒவ்வொருவனும் உங்கள் சகோதரனையும், ஒவ்வொருவனும் உங்கள் சிநேகிதனையும், ஒவ்வொருவனும் உங்கள் அயலானையும் கொன்று போடக் கடவன் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார்'' என்று கூறினான். (யாத். 32 : 27)

6. தங்களுக்குக்காக பொன்கன்றுக் குட்டியை உண்டாக்கி மகா பெரிய பாவம் செய்த ஜனங்களுக்காக மோசே எவ்வாறு பரிந்து பேசி ஜெபித்தான்? அதற்கு கர்த்தர் கொடுத்த மறுஉத்தரவு என்ன?

''தேவரீர் அவர்கள் பாவத்தை மன்னித்தருளுவீரானால் மன்னித்தருளும், இல்லாவிட்டால் நீர் எழுதின உம்முடைய புஸ்தகத்திலிருந்து என் பேரை கிறக்கிப் போடும்'' என்று பரிந்து பேசி ஜெபித்தான்.

அப்பொழுது கர்த்தர், ''எனக்கு விரோதமாய்ப் பாவம் செய்தவன் எவனோ, அவன் பேரை என் புஸ்தகத்திலிருந்து கிறுக்கிப் போடுவேன். ஆகிலும் நான் விசாரிக்கும் நாளில் அவர்களுடைய பாவத்தை அவர்களிடத்தில் விசாரிப்பேன்'' என்று மறுஉத்தரவு கொடுத்தார். (யாத். 32 : 32, 33, 34)

VIII<u>போதனை</u> : (2 Marks)

ஜீவனுள்ள தேவனைத் தள்ளிவிட்டு, விக்கிரக ஆராதனை செய்கிறவர்கள் தேவ கோபாக்கினைக்குப் பாத்திரராய் இருக்கிறார்கள்.

****

வகுப்பு : 4

பாடம்-3

ஞாயிறு பள்ளி மத்திய நிறுவனம், கடலூர்.

சீனாய் மலையில் மீண்டும் மோசே

(யாத். 33 : 18 – 23 ; 34 : 1 – 32; உபாகமம் 10 : 4)

I <u>மனப்பாட வசனம் :</u> (2 Marks)

<u>1 தீமோத்தேயு 2 : 5</u>

தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே.

II <u>பொருத்துக :</u> (1 Mark)

1. மோசே	-	கன்மலை வெடிப்பு	(யாத். 33 : 22)
2. மோசே	-	பரிந்து பேசுதல்	(யாத். 34 : 9)
3. மோசேயின் முகம்	-	பிரகாசித்தது	(யாத். 34 : 30)
4. ஆபீப் மாதம்	-	புளிப்பில்லா அப்பப்பண்டிகை	(யாத். 34 : 18)
5. ஏழாம் நாள்	-	ஓய்வுநாள்	(யாத். 34 : 21)

III <u>கோடிட்ட இடங்களை நிரப்புக :</u> (1 Mark)

1. கர்த்தர் மோசேயிடம்_____ இழைத்துக் கொண்டு மறுபடியும் மலையின் உச்சிக்கு வரும்படி சொன்னார்.

2. கர்த்தர் _____தலைமுறைகளுக்கு இரக்கத்தைக் காக்கிறவர்.

3. உன்னோடே (மோசே) கூட இருந்து நான் (கர்த்தர்) செய்யும் காரியம் _____

4. பூமியெங்கும் எந்த ஜாதிகளிடத்திலும் செய்யப்படாத _____உன் ஜனங்கள் எல்லோருக்கும் முன்பாகவும் செய்வேன்.

5. மோசே அப்பம் புசியாமலும், தண்ணீர் குடியாமலும் _____நாற்பது நாள் கர்த்தரோடு இருந்தான்.

6. மோசேயின் முகம் பிரகாசித்து இருப்பதைக் கண்டு, அவன் சமீபத்தில் சேரப் _____.

7. _____மலையில் கர்த்தர் தன்னோடே பேசினவைகளை எல்லாம் மோசே கற்பித்தான்.

விடைகள்

1. இரண்டு கற்பலகைகளை(யாத். 34 : 1)	5. இரவும் பகலும் (யாத். 34 : 28)
2. ஆயிரம் (யாத். 34 : 7)	6. பயந்தார்கள் (யாத். 34 : 30)
3. பயங்கரமாயிருக்கும் (யாத். 34 : 10)	7. சீனாய், ஜனங்களுக்கு (யாத். 34 : 32)
4. அதிசயங்களை (யாத். 34 : 10)	

IV <u>சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுது:</u> (1 Mark)

1. மோசே கர்த்தரிடம் எதை காண்பித்தருளும்படி கேட்டான்?

a)முகத்தை b)மகிமையை c)கிருபையை d)அதிசயங்களை

2. மோசே முந்தின கற்பலகைகளுக்கு ஒத்த இரண்டு கற்பலகைகளை இழைத்துக் கொண்டு எப்பொழுது சீனாய் மலையின் மேல் ஏறினான்?
a)மாலையில் b)காலையில் c)அதிகாலையில் d)நள்ளிரவில்

3. கர்த்தர் குற்றவாளிகளை எத்தனை தலைமுறை மட்டும் விசாரிக்கிறவர்?
a) முதலாம் இரண்டாம் b)மூன்றாம் நான்காம் c)ஐந்தாம் ஆறாம் d) ஏழாம் எட்டாம்

4. கர்த்தர் எத்தனை தலைமுறை மட்டும் இரக்கத்தைக் காக்கிறவர்?
a)இரண்டாயிரம் b)மூவாயிரம் c)நான்காயிரம் d) ஆயிரம்

5. அபீப் மாதத்திலே இஸ்ரவேலர் எங்கிருந்து புறப்பட்டனர்?
a)எகிப்திலிருந்து b)கானானிலிருந்து c)ரெவிதீமிலிருந்து d) சீனாயிலிருந்து

விடைகள்					
1.	b. (யாத். 33 : 18)	3.	b. (யாத். 34 : 7)	5.	a. (யாத். 34 : 18)
2.	c. (யாத். 34 : 4)	4.	d. (யாத். 34 : 7)		

V <u>யார் யாரிடம் கூறியது</u> : (2Marks)

1. "உம்முடைய மகிமையை எனக்கு காண்பித்தருளும் " (யாத். 33 : 18)
யார் : மோசே
யாரிடம் : கர்த்தரிடம்

2. "நீ என் முகத்தை காணமாட்டாய்" (யாத். 33 : 20).
யார் : கர்த்தர்
யாரிடம் : மோசேயிடம்

3. "இதோ, என்னண்டையில் ஒரு இடம் உண்டு".(யாத் 33 : 21)
யார் : கர்த்தர்
யாரிடம் : மோசேயிடம்

4. "என் கரத்தினால் உன்னை மூடுவேன்". (யாத். 33 : 22)
யார் : கர்த்தர்
யாரிடம் : மோசேயிடம்

5. "எங்களை உமக்கு சுதந்திரமாக ஏற்றுக் கொள்ளும்".(யாத் 34 : 9)
யார் : மோசே
யாரிடம் : கர்த்தரிடம்

6. "வெறுங்கையோடே என் சந்நிதியில் ஒருவனும் வரக்கூடாது". (யாத். 34 : 20)
யார் : கர்த்தர்
யாரிடம் : மோசேயிடம்

VI <u>ஓரிரு வாக்கியங்களில் விடையளி :</u> (2 Marks)

1. தாங்கள் கர்த்தருடைய சுதந்தரமாகும்படிக்கு எவைகள் மன்னிக்கப்பட வேண்டுமென்று மோசே கர்த்தரிடம் விண்ணப்பம் பண்ணினான்?
அக்கிரமத்தையும், பாவத்தையும் மன்னித்து தங்களை சுதந்திரமாக ஏற்றுக் கொள்ளும்படியாக மோசே கர்த்தரிடம் விண்ணப்பம் பண்ணினான். (யாத். 34 : 9)

2. இஸ்ரவேல் ஜனங்கள் கானான் தேசத்தில் போய் சேரும்போது எதைக்குறித்து எச்சரிக்கையாய் இருக்க வேண்டும் என்று கர்த்தர் சொன்னார்? ஏன்?
அவர்கள் போய் சேருகிற தேசத்தின் குடிகளோடு உடன்படிக்கை பண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்க வேண்டும் என்றும், இல்லாவிட்டால் அது அவர்கள் நடுவில் கண்ணியாய் இருக்கும் என்றும் கர்த்தர் சொன்னார்.(யாத் 34 : 12)

3. புளிப்பில்லா அப்பப் பண்டிகை எத்தனை நாட்கள் கொண்டாடப்பட்டது? எப்போது கொண்டாடப்பட்டது?

1) ஏழு நாட்கள் 2) ஆபீப் மாதம் (யாத் 34 : 18)

4. இஸ்ரவேல் ஜனங்கள் எப்போதெல்லாம் ஓய்ந்திருக்க வேண்டும்?

ஏழாம் நாளிலும், விதைப்புக் காலத்திலும், அறுப்புக் காலத்திலும் ஓய்ந்திருக்க வேண்டும். (யாத். 34 : 21)

5. வருஷத்தில் எத்தனை தரம், யார் கர்த்தராகிய ஆண்டவரின் சந்நிதியில் வரவேண்டும்?

வருஷத்தில் மூன்று தரம் ஆண்மக்கள் எல்லாரும் கர்த்தராகிய ஆண்டவரின் சந்நிதியில் வரவேண்டும. (யாத். 34 : 23)

6. இஸ்ரவேலின் ஆண்மக்கள் எல்லாரும் கர்த்தருடைய சந்நிதிக்கு போயிருக்கும்போது கிடைக்கும் ஆசீர்வாதங்கள் யாவை?

அவர்களுக்கு முன்பாக புறஜாதிகள் துரத்தப்பட்டு, அவர்களுடைய எல்லைகள் விஸ்தாரமாக்கப்படும். அவர்களுடைய தேசத்தை ஒருவரும் இச்சிப்பதில்லை.(யாத்.34:24)

7. மோசேயின் முகம் எதினால் பிரகாசித்தது?

மோசே அப்பம் புசியாமலும், தண்ணீர் குடியாமலும், இரவும் பகலும் நாற்பது நாள் கர்த்தரோடே இருந்தான். அப்போது கர்த்தர் அவனோடே பேசினார். ஆகையினால் அவனுடைய முகம் பிரகாசித்தது. (யாத். 34 : 28, 29)

8. மோசேயின் முகம் பிரகாசமாய் இருப்பதை கண்டு, அவனுக்கு சமீபித்து வர பயந்தவர்கள் யார்?

ஆரோனும், இஸ்ரவேல் ஜனங்கள் எல்லாரும், மோசேயின் முகம் பிரகாசமாய் இருப்பதை கண்டு அவனுக்கு சமீபித்து வர பயந்தார்கள். (யாத். 34 : 30)

9. மோசே சீனாய் மலையிலிருந்து இறங்கி வந்த பின்பு அவனிடத்தில் சேர்ந்தவர்கள் யார்? அவர்களுக்கு மோசே என்ன கற்பித்தான்?

இஸ்ரவேல் புத்திரர் எல்லாரும் மோசேயினிடத்தில் சேர்ந்தார்கள். அப்பொழுது அவன் சீனாய் மலையில் கர்த்தர் தன்னோடே பேசினவைகளை எல்லாம் அவர்களுக்கு கற்பித்தான். (யாத். 34 : 32)

VII <u>சுருக்கமான விடையளி</u> : (4 Marks)

1. மோசே தான் உடைத்துப் போட்ட கற்பலகைகளுக்கு பதிலாக தேவனால் திரும்பவும் அந்த கற்பனைகள் எழுதப்பட என்ன செய்ய வேண்டியதாயிருந்தது?

1) மோசே, முந்தின கற்பலகைகளுக்கு ஒத்த இரண்டு கற்பலகைகளை இழைத்து கையிலே எடுத்துக் கொண்டு,

2) விடியற்காலத்தில் ஆயத்தமாகி,

3) சீனாய் மலையின் உச்சிக்கு ஏறி, கர்த்தருடைய சமூகத்தில் போய் நிற்க வேண்டியதாயிருந்தது.(யாத்34:6,7)

2. கர்த்தர் தம்முடைய நாமத்தையும், தன்மைகளையும் பற்றி மோசேக்கு வெளிப்படுத்தினது என்ன?

1.கர்த்தர் தம்முடைய நாமத்தை 'கர்த்தர்' என்று மோசேக்கு வெளிப்படுத்தினார்.

2.<u>கர்த்தரின் தன்மைகள் :</u>

i) கர்த்தர் இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும், மகா தயையும், சத்தியமுமுள்ள தேவன்.

ii) ஆயிரம் தலைமுறைகளுக்கு இரக்கத்தைக் காக்கிறவர்

iii) அக்கிரமத்தையும், மீறுதலையும், பாவத்தையும் மன்னிக்கிறவர்.

iv) குற்றவாளியை குற்றமற்றவனாக விடாமல் மூன்றாம் நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிறவர். (யாத். 34 : 6, 7)

3. உமக்கு சுதந்தரமாக ஏற்றுக் கொள்ளும் என்று மோசே விண்ணப்பித்தபோது கர்த்தர் அவனோடே பண்ணின உடன்படிக்கை என்ன?

1) பூமியெங்கும் எந்த ஜாதிகளிடத்திலும் செய்யப்படாத அதிசயங்களை ஜனங்கள் எல்லாருக்கும் முன்பாக செய்வதாகவும்,

2) மோசேயோடு இருக்கிற ஜனங்கள் எல்லாரும் கர்த்தருடைய செய்கையை காண்பார்கள் என்றும்,

3) மோசேயோடு இருந்து தான் செய்யும் காரியம் பயங்கரமாய் இருக்கும் என்றும் கர்த்தர் மோசேயோடு உடன்படிக்கை பண்ணினார். (யாத். 34 : 10)

4. மோசே கர்த்தருடைய பின்பக்கத்தை எவ்வாறு கண்டான்?

கர்த்தர் அவனை கன்மலையின் வெடிப்பிலே வைத்து, தான் கடந்து போகும் மட்டும் தன் கரத்தினால் அவனை மூடினார்.

பின்பு கர்த்தர் தம்முடைய கரத்தை எடுத்தார். அப்பொழுது மோசே கர்த்தரின் பின்பக்கத்தை கண்டான். (யாத் 33 : 22, 23)

VIII<u>போதனை</u> : (2 Marks)

மோசே இஸ்ரவேல் ஜனங்களுக்காகத் தேவனிடம் பரிந்து பேசியது போல, கர்த்தராகிய இயேசுவும் பிதாவின் முன்பாக நமக்காகப் பரிந்து பேசுகிறார்.

****